**சிறைக்கைதிகளின் நலனோம்பு நிதியம் - 2017**

சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைச்சாலை கைதிகள் நலனோம்பு நிதியச் சட்டத்தின் 7(1) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக குடியரசு அரசியமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இந்த நிதியம் தொடர்பாக முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு 2018 செப்டம்பர் 17 திகதி வழங்கப்பட்டது. 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைச்சாலைகள் நலனோம்பு நிதியச் சட்டத்தின் 7(2) ஆம் பிரிவின் பிரகாரம் சிறைச்சாலைகள் திணைக்களத்தின் வருடாந்த அறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக் கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் விளைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் மற்றும் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழிப்புள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பு நிதியத்தின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 07**

(i) சொத்தொன்று பறிமாற்றப்படாத கொடுக்கல் வாங்கல் ஒன்று ஊடாக தனதாக்கிய போது அதன் கிரயத்தை அந்த சொத்தை தனதாக்கிய நாளில் காணப்பட்ட நியாயமான பெறுமதிக்கு பெறுமதி கணிக்கப்பட வேண்டுமெனினும் 03 சிறைச்சாலை நிறுவனங்களின் 43 நன்கொடை சொத்து விடயங்களின் கிரயம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ii) சொத்தொன்றின் ஆக்கபூர்வமான வாழ்க்கை காலத்தை தீர்மானிக்கும் போது சொத்தின் மூலம் எதிர்பார்க்கும் பயன்பாடு, சொத்தின் எதிர்பார்க்கும் கொள்திறன் என்பவற்றை கவனத்தில் எடுத்து பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டுமெனினும் நிதியத்தின் ரூபா 1,424,252 தொகைக்கான நன்கொடைச் சொத்துக்களுக்காக எதிர்பார்க்கும் பயன்பாட்டை கவனத்தில் எடுத்திருக்கவில்லை.

### 2.2.2 கணக்கீட்டு கொள்கைகள்

நன்கொடையாக கிடைக்கும் சொத்துக்களின் பெறுமதியின் முறைசார் அடிப்படையில் வருடாந்தம் வருமானம் என இனங்காணக்கூடிய விதமாக கணக்கீட்டு கொள்கையொன்றினால் இனங்கண்டிருக்காமையினால் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நன்கொடை சொத்துக்களின் தாங்கக்கூடிய பெறுமதி ரூபா 9,016,241 தொகை எனினும் அத்திகதியில் உள்ளவாறு நன்கொடை சொத்துக்களின் ஒதுக்கக் கணக்கின் மீதி ரூபா 22,721,280 தொகையாக இருந்தது.

### 2.2.3 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 06 சிறைச்சாலை நிறுவனங்களினால் கொள்வனவு செய்திருந்த ரூபா 77,950 தொகை கிரயத்தையுடைய நுகர்வுப் பண்டங்கள் மற்றும் 09 சிறைசாலை நிறுவனங்களுக்கு நன்கொடையாகக் கிடைத்திருந்த ரூபா 64,650 தொகைக்கான நுகர்வுப் பொருட்கள் நடைமுறை அல்லாத சொத்துக்கள் என கணக்கீடு செய்திருந்தமையால் நடைமுறை அல்லாத சொத்துக்கள் ரூபா 142,600 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 05 சிறைச்சாலை நிறுவனங்களுக்கு கடந்த ஆண்டு தொடர்பாக மீளாய்வு ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 91,175 தொகைக்கான சிறைக்கைதிகள் உழைப்பு வருமானம் மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டு தொடர்பாக பெறவேண்டிய ரூபா 58,647 இற்கான சிறைக்கைதிகள் உழைப்பு வருமானம் நிதிக்கூற்றுக்களில் சீராக்கல் செய்திருக்கவில்லை.

(இ) மகஸின் சிறைச்சாலைக்கு மீளாய்வாண்டின் போது கிடைத்திருந்த ரூபா 70,000 கிரயத்தையுடைய நன்கொடைச் சொத்துக்கள் ரூபா 7,000 தொகை என கணக்கீடு செய்திருந்தமையால் நன்கொடை சொத்துக்கள் ரூபா 63,000 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) சிறைக்கைதிகள் உழைப்பு வழங்கியது தொடர்பாக கிடைக்க வேண்டிய 2016 ஆண்டிற்கான மீள் வெளியீட்டு பெறுமதி ரூபா 1,028,800 தொகை எனினும், குறிப்பிட்ட பேரேட்டுக் கணக்கில் 2017 ஆண்டிற்கான முன் கொண்டுவந்த மீதி ரூபா 1,036,800 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 8,000 இனால் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.4 இணக்கஞ் செய்யப்படாத கட்டுபாட்டுக் கணக்குகள்

(அ) 04 சிறைச்சாலை நிறுவனங்களினால் மீளாய்வாண்டு தொடர்பான வருமானம் ரூபா 599,560 தொகை என உறுதிப்படுத்தியிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவை 655,568 தொகை ஆகக் காணப்பட்டமையால், ரூபா 56,008 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறுவனவுகள் ரூபா 1,516,647 தொகை எனினும், கணக்கு பொழிப்பின் பிரகாரம் பெறுவனவுகள் ரூபா 1,602,381 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 85,734 இற்கான வித்தியாசமொன்று அவதானிப்பட்டதுடன் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் செலவுகள் ரூபா 2,921,448 தொகை எனினும் கணக்கு பொழிப்பின் பிரகாரம் செலவுகள் ரூபா 2,987,839 தொகையாகக் காணப்படாமையால் ரூபா 66,391 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது.

### 2.2.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் கணக்கு மீதிகளின் எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

| விடயம் | பெறுமதி | சமர்பிக்கப்படாத சான்றுகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) அட்டுறு சிறை உழைப்பு வருமானம் மற்றும் முற்பணம் | 9,340 | 02 சிறைச்சாலை நிறுவனங்களின் மீதிகளை உறுதி செய்தல் |
| (ஆ) நன்கொடைச் சொத்துக்கள் | 2,220,016 | 16 சிறைச்சாலை நிறுவனங்கள் உறுதிப்படுத்தல் அறிக்கைகள் |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள்

03 சிறைச்சாலை நிறுவனங்களில் உள்ளக கிளர்ச்சிகளின் காரணத்தினால் சேதமடைந்திருந்த நன்கொடை சொத்துக்கள் மற்றும் காலி சிறைச்சாலையில் 2004 ஆண்டின் போது சுனாமி பேரழிவினால் அழிந்த நன்கொடை பண்டங்கள் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 104 பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3 நிதிச் செயலாற்றுகை

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 2,705,398 இற்கான பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 3,238,425 இற்கான பற்றாக்குறை காணப்பட்டமையால், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 533,027 வளர்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக நிதியத்தின் வருமானம் ரூபா 276,953 இனால் அதிகரித்திருத்தல் மற்றும் சிறைக்கைதிகள் நலனோம்பு செலவுகள் ரூபா 214,937 இனால் குறைவடைதல் மேற்கூறிய வளர்ச்சிக்கு முக்கியமாக பாதித்துள்ளது.

## 4 செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பயன்படுத்தல் முடிந்த, செயற்படாத மற்றும் முற்றாக பெறுமானத் தேய்வு கழிக்கப்பட்ட ரூபா 1,104,391 தொகை கிரயத்தையுடைய 60 நன்கொடை சொத்து விடயங்களை ஏடுகளில் இருந்து அகற்றுவதற்காக 11 சிறைச்சாலை நிறுவனங்களினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) போகம்பர சிறைச்சாலை தும்பறை சிறைச்சாலை என இடம் பெயர்ந்த போது ரூபா 189,315 தொகை கிரயத்தையுடைய 15 நன்கொடை சொத்து விடயங்கள் காணாமல் போயிருந்ததுடன் அதற்காக நிதிப்பிரமாணம் 103(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. மேலும் கொழும்பு சிறைச்சாலையின் ரூபா 46,500 கிரயத்தையுடைய 05 நன்கொடை சொத்துவிடயங்கள் தொடர்பாக நிதிப்பிரமாணங்கள் 752(4) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.2 செயற்பாட்டு திறமையின்மை

மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் வருமானம் ரூபா 1,524,250 தொகை ஆக இருந்ததுடன் வருமானத்தை அதிகரிப்பதற்காக சட்டத்தின் பிரகாரம் காணப்படும் ஏற்பாடுகளை பயன்படுதததுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. விஷேடமாக உல்லாச பண்டங்கள் விற்பனவின் மூலம் கிடைக்கும் தேறிய வருமானத்தில் நிதியத்திற்கு கிடைக்கும் பங்கை அதிகரித்துக் கொள்வதற்கு, சிறை வேதனங்களின் நிதயத்திற்கு கிடைக்கும் பங்கை அதிகரித்துக் கொள்வதற்கு, சிறை உழைப்பு வழங்குவதன் மூலம் வெளி நிறுவனங்களிலிருந்து அறவிடப்படும் தொகையை அதிகரித்துக் கொள்வதற்கு, பொதுமக்களின் நன்கொடைகளை அதிகரித்து கொள்வதற்கு மற்றும் சிறைச்சாலைகளின் சிற்றுண்டிச்சாலை நடாத்துவதற்கு பொருத்தமான நடைமுறை ஒன்றை இனங்கண்டு செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், 1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலனோம்பு நிதிய சட்டத்தை திருத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமானம் 133 மற்றும் 134 இன் பிரகாரம் சிறைக்கைதிகள் நலனோம்பு நிதியத்தின் கருமங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேறகொள்ளப்பட்டிருக்காததுடன் உள்ளகக் கணக்காய்வு திட்டத்திலும் சிறைக்கைதிகள் நலனோம்பு நிதியத்தின் கருமங்கள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களின் கணக்காய்வு தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

09 சிறைச்சாலை நிறுவனங்களின் மதிப்பீட்டுச் செலவு மற்றும் உள்ளவாறான செலவுகள் இடையே 26 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் மற்றும் 14 சிறைச்சாலை நிறுவனங்களில் மதிப்பீட்டு பெறுவனவுகள் மற்றும் உள்ளவாறான பெறுவனவுகள் இடையே 32 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் முரணாக அவதானிக்கப்பட்டமையானது பாதீட்டு ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள் குறைபாடுகள் சிறைச்சாலைகளின் ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு அவ்வப்போது கொண்டு வரப்பட்டது. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | கணக்கீடு | பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களை உரிய முறையில் கடைபிடிக்காமை மற்றும் கணக்கு ஏடுகள் மற்றும் பதிவேடுகள் உரிய முறையில் பேணப்படாமை. |
| (ஆ) | சொத்துக்கள் கட்டுப்பாடு | நிலையான சொத்துக்கள் பதிவேடு, நன்கொடை சொத்துக்கள், மெய்மையாதல் அறிக்கை மற்றும் பண்டக் கணிப்பீட்டு அறிக்கையிடையே வித்தியாசங்கள் காணப்படல், நன்கொடையாக கிடைத்திருந்த நிலையான சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்யாமை மற்றும் சொத்துக்களை பௌதீக ரீதியாக மெய்மையாய்தல் மேற்கொள்ளாமை. |